

மூளாய் தெற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த சைவ மங்கையர் குலதிலகமான

அமரர் **திருமதி இராசா பாக்கியம்** அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# ஞாபகார்த்தமலர்

**02.05.2006**


# சமர்ப்பணம்

மானிலந்தன்னில்
மதிப்புடன் யாம் வாழ
பெற்று வளர்த்துப் பேணி எடுத்துப்
புத்திபுகட்டி நன்னெறிகாட்டி நம்
வாழ்விற்கெல்லாம் அயராது உழைத்து
உயர வைத்த
எம்தாயே! எமை ஈன்றெடுத்த
தெய்வமே! தங்களின் இனிய
பாதகமலங்கட்கு இந்த நினைவு
மலரைச் சமர்ப்பணம் செய்து
என்றென்றும் தங்களை நினைந்து
வணங்கித் துதிக்கின்றோம்.

குடும்பத்தினர்.



உ
சிவமயம்



தோற்றம்
02.04.1931

மறைவு
02.04.2006

## அமரர்
# திருமதி இராசா பாக்கியம்
## அவர்கள்

## திதி வெண்பா

பார்த்திப நல்லாண்டு பைந்திங்கள் பங்குனியில்
சீர் பெற்ற பெருநாளாம் சதுர்த்தியில் - பார்புகழும்
மாதரசி பாக்கியம் மண்ணுலகு தனை நீக்கி
மாதவன் தாள் சேர்ந்தாரென மன்னு.

# பஞ்சபுராணம்



## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர் பானீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்த தாரே

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள் புரியாயே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
தெளிவளர் தெய்வத் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

புரந்தரன் மாலயன் பூசலிட்டு ஓலமிட்டு
இன்னும் புகவரிதாய்
இந்திரத் தழைப்ப என்னுயிராண்ட
கோவிலுக்கு என்செய்ய வல்லமென்று
கரந்தும் கரவாத கற்பகனாகிக்
கரையில் கருணைக் கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லை வந்தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்பவெள்ளம் எனக்கருளிச் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடும் சேவடி போற்றி என்ன

## திருப்புகழ்

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளே சிறக்க அருள்வாயே
கதிர் காம் வெற்பி லுறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனிமிர்த்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## 02.04.2006 அமரத்துவமடைந்த எமது அன்னை இராசா பாக்கியம் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

யாழாலுயர்ந்த யாழ். குடாநாட்டின் மேற்றிசையமைந்து முத்தெனத் திகழ்வது மூளாய் எனும் பேரூர். இவ்வூரின் தென்பகுதியில் கதிரவேலு நாகமுத்து தம்பதிகள் இல்லறமெனும் நல்லறத்தில் இனிதே வாழ்ந்து உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனம் செய்வோம் என்றும் பாரதியின் நல்வாக்கிற்கமையச் சிறந்த விவசாயத் தொழிலை மேற்கொண்டு சீருஞ்சிறப்புமாக வாழ்ந்து வந்தார்கள்.

இவர்கள் இல்லற தர்மத்தை இனிதே நடத்தியதால் செல்லத்துரை, பொன்னம்மா [அமரர்], ஆறுமுகம், இராசம்மா, பாக்கியம் [வரலாற்றின் நாயகி] ஆகிய குழந்தைகளைப் பெறும் பேறு பெற்றனர். இப்பிள்ளைகளில் இளைய புதல்வியும் இவ்வரலாற்றின் நாயகியுமான பாக்கியம் அவர்கள் பெற்றோர்க்கும் சகோதரர்களுக்கும் உற்றார், உறவினர் யாவர்க்கும் அன்புச் செல்வமாகவும் செல்லப்பிள்ளையாகவும் திகழ்ந்தார்.

மூளாய் அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வியைத் தொடர வைத்தனர் பெற்றோர். கற்கும் காலத்தில் புத்திசாதுரியமுடையவராகத் திகழ்ந்தார். நற்பண்புகள் நிறைந்தவராக விளங்கினார். பெற்றோர், சகோதரர்களின் அன்பிலும் அரவணைப்பிலும் வாழ்ந்து வளர்ந்துவந்த பாக்கியம் அவர்கள் திருமண வயதை அடைந்ததும் பெற்றோர் அவருக்குத் திருமணம் செய்துவைக்க விரும்பினர்.

இவ்வேளை மூளாயில் பேரும் புகழும் பெற்றிலங்கிய ஆறுமுகம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகனாகிய ஆசிரியர் இராசா அவர்களைத் தம் மகளுக்கு ஏற்ற வரன் எனக் கருதி 1956ஆம் ஆண்டு இருவருக்கும் திருமணம் செய்துவைத்து இன்புற்றனர்.

வள்ளுவன் காட்டிய வழியில் வாழ்ந்த ஆசிரியர் இராசா பாக்கியம் தம்பதிகள் இனிய புத்திரச் செல்வங்களாக கமலாம்பிகை, இராதா, முருகதாஸ், ஸ்ரீதேவி, அரியதாசன், ரஜனி, கலாரஞ்சினி, கமலலோசினி என்னும் பெருஞ்

செல்வங்களைப் பெற்றுப் பேருவகையடைந்தனர்.

பிள்ளைச் செல்வங்களைப் பேணி வளர்த்துக் கல்வி புகட்டி யாவரையும் இப்புவியில் சிறப்புடன் இலங்க வைத்தனர்.

மூன்று பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைத்து மகிழ்ந்தனர். மூத்தமகன் முருகதாஸ் அவர்களுக்கு பொன்னாலையைச் சேர்ந்த சுதாமதி என்னும் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தனர். ஸ்ரீதேவி ஆகிய மகளை அச்சுவேலியில் குலசிங்கம் அவர்களுக்கு கல்யாணம் செய்து வைத்தனர். கலாரஞ்சினி என்னும் மகளுக்கு இத்தாலியில் இன்று சிறப்புடன் வாழும் மோகனதாசன் அவர்களுக்கு வதுவை செய்து வைத்தனர்.

அதிபராகப் பதவியுயர்ந்த ஆசிரியர் இராசா அவர்களும் மனைவி பாக்கியம் அவர்களும் பிள்ளைகள் யாவரும் கல்வி கற்று வாழ்வில் உயர்வடைய அயராது உழைத்தனர். இவர்களுள் இரண்டாவது மகளாகிய இராதா அவர்களைப் பட்டதாரியாக்கி ஆசிரியராக விளங்கவைத்தனர். இன்று இராதா அவர்கள் ஆசிரிய ஆலோசகராக வலிகாமம் கல்வி வலயத்தில் சேவையாற்றுகின்றார். இளைய மகனாகிய அரியதாசன் முன்பு ஆசிரியராகத் திகழ்ந்து தற்பொழுது லண்டன் மாநகரில் தொழில்புரிந்து வருகின்றார்.

திருமதி இராசா பாக்கியம் அவர்கள் தன் கணவனுக்கேற்ற தர்மபத்தினியாகவும் தம்பிள்ளைகளுக்கு இனிய சிறந்த தாயாகவும் உற்றார், உறவினர்க்கு உதவும் பாசத் தொடர்பாலமாகவும் திகழ்ந்து வருங்காலை "பாயிற் படுக்கவில்லை. பத்துமாதம் செல்லவில்லை. மாயக் கடதாசி மடிமேல் விழுந்தது என்ன" என்று நாம் ஏங்கி நிற்க 02.04.2006 அன்று திடீர் சுகவீனமுற்று அந்தகன் அழைத்துச் செல்ல ஆண்டவன் திருவடியை அடைந்தார்.

இறைவன் அழைப்புத் திடீரென வந்ததால் கட்டிய கணவன் கண்ணீர் மல்கித் துவண்டு வாட பெற்றபிள்ளைகள் பேதலித்துக் கண்ணீர் சொரிந்து கதறியழுது கவலைக் கடலில் மூழ்க உற்றார், உறவினர் எம்பாக்கியமே! எம்பாக்கியமே! எமைவிட்டு எங்கு சென்றாய்? என ஏங்கி அழக் கண்ணீர்க் கடலில் யாவரையும் மூழ்கவைத்து இறையடி சேர்ந்தார்

**அமரர் திருமதி இராசா பாக்கியம்** அவர்கள் ஊரோடு உறவாடுவதிலும் உற்றாரின் பெருவைபவங்களில் முன்னின்று உதவுவதிலும் அலாதிப் பிரியமுடையவர். சிறந்த குடும்பத்து இல்லக விளக்காகப் பிரகாசித்தவர், இன்றில்லையே எனும்போது கவலை பெருகுகிறது - கண்ணீர் வருகிறது.

அமரர் அவர்கள் தான தருமங்கள் செய்வதிலும் தெய்வ வழிபாடுகளிலும் பேரவாக் கொண்டவர். மூளாய் அரிஹரபுத்திர ஐயனார், மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர், முருகன் ஆலயங்களில் வழிபாடு செய்வதிலும் விரதநோன்புகளைச் செய்வதிலும் அதிக ஈடுபாடு கொண்டவர். இத்தகைய மாதரசி, மங்கையர் திலகம் யாவரையும் விட்டு இறையடி சேர்ந்துவிட்டார். என் செய்வது எல்லாம் விதிப்பயனேயென்று கவலையை விடுவோம்! - ஆறுதல் கொள்வோம்! - அமைதி கொள்வோம்! அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லாம்வல்ல இறைவனை என்றும் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!



# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமு மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியு மிலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தெ னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகளொடுங்கும் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறாய் நிறுத்திப் பேச்சுரை யறுத்தே

இடையின் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்திக்
குண்டலியதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங்கூறி
இடைச்சக் கரத்தினீரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூட்கமும்
எண்முக மாக வினிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லாமனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்த முத்தி என்செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வளி காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

முற்றும்

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏக னநேக னிறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பயன்யான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தொல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகளுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புளுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுன்னியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா

பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப்பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொளும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றங் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னனொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிறாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெட
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே

ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி லுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

சிவபுராணம் முற்றிற்று



# சகலகலா வல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சக மேழுமளித்
துண்டாணுறங்க வொளித்தான் பித்தாக
வுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்கை யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே

அழிக்கும் செழுந்தமிழ்ச் செல்வமு
தார்த்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே

தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வடநூற் கடலும்

தேக்கும் செழுந் தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலுவெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காய்உளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பால
முதந் தெழிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதி மப்பேடே
சகலகலா வல்லியே

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை
கொள்வாய் நளினாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கு முயிரா
மெய்ஞ்ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார் நிலந் தோய்புலக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே

மண்கண்ட வெண்குடக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதொ
சகல கலாவல்லியே

முற்றும்

# அபிராமி அம்மை பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடு வாராத நட்பும்
குன்றாத வளமையும் குன்றாத இளமையும்
களி, பிணி இல்லாத உடலும்
சலியாத மனமுமன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாளாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமிலாத வாழ்வும்
துய்யனின் பாதத்தின் அன்முதவிப்பெரிய
தொண்டரோடு கூட்டு கண்டாய்
அலையாளி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லனவெல்லாம் தரும் அன்பரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை
அண்டமெல்லாம் பூத்தாளை
மாதுளம்பூ நிறத்தாளை
புவியடங்கக் காத்தாளை
ஐங்கனை பாசாங்குசமும்
கரும்பும் வில்லும் சேர்த்தாளை
முக்கண்ணியைத் தொழுவார்க்கு
ஒரு தீங்கில்லையே

# சக்தி நாமாவளி

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
{ஓம்}

ஷுந்தரவதனி ஸுகுண மனோஹரி
மந்தஹாஸ முக மதிவதனி
சந்தன குங்கும அலங்காரமுடனே
தந்துடுவா யுந்தன் தரிசனமே
{ஓம்}

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையாயுன் புகழ் பாடிடவே
{ஓம்}

தங்கச் சிலம்பு சலசலவென்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்கு மானந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய்
{ஓம்}

வேதங்கள் உன்னை வேண்டிப்பாடிட
விரும்பி ஸரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்த மான ஜோதிஸ்வருபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம்
{ஓம்}

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் குலவிளக்கும் தலைவியும்
பெற்று வளர்த்தும் பேணி எடுத்துப் புத்தி புகட்டி
எமை ஆளாக்கிய அன்புத் தெய்வமாக விளங்கிய
எம் தாயார்க்கு அன்பும் பாசமும் காட்டிய
அன்புள்ளங்களுக்கும் இறுதிக்கிரியைகளின்போது
நேரில் பங்கு பற்றித் துன்ப உணர்வுகளை
வெளிப்படுத்தியோர்க்கும் தந்திகள், கடிதங்கள்,
தொலைபேசி மூலமாக அனுதாபம்
தெரிவித்தோர்க்கும் இன்றைய அந்தியேட்டி
வைபவத்தில் கலந்துகொண்டு
சிறப்பித்தோருக்கும் மிகக் குறுகிய காலத்தில்
இந்த நினைவு மலர் மலர ஆலோசனை
வழங்கிய திருமுருக கிருபானந்த வாரியார்
சுவாமிகளின் பிரதம சீடன் கலாபூஷணம் சுழிபுரம்
நடேசன் சிவசண்முகமூர்த்தி [முன்னாள்
வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்]
அவர்களுக்கும் மலரை அச்சிட்டுதவிய
293 A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில்
அமைந்துள்ள கற்பக விநாயகர்
அச்சகத்தாருக்கும் எமது உளங்கனிந்த
நன்றியை நவில்கின்றோம்.

*மூளாய் தெற்கு,*
*சுழிபுரம். 02. 05. 2006*

இங்ஙனம்
**குடும்பத்தினர்.**




கற்பக விநாயகர் அச்சகம், 293 A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.